07.12.2023

**பி.சா. 1**

**திரு முகமது கஸ்ஸாலி**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்)**

பாகப் பிரிவினை வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும், ஏனென்றால் பி.சா.ஆ.2 ஆவணப்படி ஏற்கனவே பாகப் பிரிவினை ஆகிவிட்டது என்பது என்னுடைய வழக்கு என்றால் சரிதான். பி.சா.ஆ.2 தேதியான 29.01.2015 முதல் வழக்கு தாக்கல் செய்யும் நாள் வரை பலமுறை வாதி இந்தியாவிற்கு வந்து சென்றுள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு வாதி வந்து சென்ற போது பி.சா.ஆ.2 ஆவணத்தில் அவரிடம் கையெழுத்து வாங்கினோமா என்றால் கையெழுத்து வாங்கவில்லை. பி.சா.ஆ.2 ஆவணத்தின் 2-ம்

பக்கம், 2-ம் பத்தியில் விரைவில் ரசூல்தீன் சிங்கப்பூரிலிருந்து வந்தவுடன் பாகப் பிரிவினை செய்து கொள்ள வேண்டுமென்றும் அந்த பத்திரத்தை பதிவு செய்து கொள்ள வேண்டுமென்றும் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். மேலும், பி.சா.ஆ.2 ஆவணமானது ஒரு தற்காலிக ஏற்பாடு என்று அந்த ஆவணத்தில் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். பி.சா.ஆ.2 ஆவணத்தில் கண்டுள்ளபடி ஏதேனும் பத்திரப் பதிவு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றால் எடுக்கப்படவில்லை. ஏனெனில் வாதி லோக் அதாலத் மூலம் சமாதானம் பேசினோம், அவர் ஒத்து வரவில்லை, சிங்கப்பூர் சென்று விட்டார். பி.சா.ஆ.2 ஆவணமே நான் 2 முதல் 4 பிரதிவாதிகளுடன் சேர்ந்து வழக்கிற்காக பொய்யாக தயாரித்த ஆவணம் என்றால் சரியல்ல. 29.01.2015 தேதியன்று நான் சொன்ன மாதிரி எந்தவொரு பாகப் பிரிவினை பத்திரமும் ஏற்படுத்தப்படவில்லை என்றும் அந்த விபரம் வாதிக்கும் தெரியப்படுத்தவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வாதிக்கு தகவல் தெரியப்படுத்தியுள்ளோம், ஜமாத் மூலமாக பேசியுள்ளோம். மேற்கண்ட விளக்கமானது வழக்கிற்காக தவறாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பாகப் பிரிவினை வழக்கை தள்ளுபடி செய்ய 2-வது காரணமாக வேறு பல சொத்துக்களும் உள்ளதை காட்டியுள்ளோம் என்றால் சிங்கப்பூர் சொத்தை சேர்க்க வேண்டும் என்று சொல்லியுள்ளோம். பி.சா.ஆ.2 ஆவணத்தில் சிங்கப்பூர் சொத்தை தனியாக பாகப்

பிரிவினை செய்து பிரித்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லியுள்ளோமா என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு சிங்கப்பூரில் உள்ள சொத்துக்களின் விபரங்களை குறிப்பிட்டு தனியாக மனு தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. சிங்கப்பூரில் உள்ள சொத்துக்கள் என் அப்பா என்.அப்துல் கபூர் பெயரில் உள்ளது. சொத்து என்ன வகை என்றால் கடை. அதன் விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். இதுநாள்வரை சிங்கப்பூரில் உள்ள கடை விபரத்தை குறிப்பிட்டு அதை பாகப் பிரிவினை செய்து கொள்ள வேண்டுமென்று வாதிக்கு தெரியப்படுத்தியுள்ளோமா என்றால் என் வழக்கறிஞர் மூலமாக வாதியின் பிள்ளைகளுக்கு அனுப்பியுள்ளோம். வாதியிடமிருந்து எங்களுக்கு தகவல் வரவில்லை. சிங்கப்பூரில் இருந்த கடையானது அரசினால் இடித்து தள்ளப்பட்டு விட்டது. வாரிசுதாரர் விபரம் சொல்லுமாறு கடையை நடத்திய நஜிபுதீன் என்பவர் எங்களிடம் போனில் தகவல் கேட்டார். சிங்கப்பூர் சொத்துக்களை அந்த நாட்டு சட்டப்படி அந்த நாட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து பாகப் பிரிவினை பரிகாரம் தேடி கொள்ள முடியும் என்ற விபரம் எனக்கு தெரியும். அதனால்தான் சிங்கப்பூர் சொத்துக்களை இந்த வழக்கில் வழக்கு சொத்தாக சேர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை. வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்துக்களிலிருந்து வருமானம் எதுவுமில்லை என்றால் எங்களுக்கு வருமானம் ஏதுமில்லை, வாதிக்கு கல்யாண மண்டபம் மூலம் வருமானம்

வருகிறது. நான் சொல்வதுபோல் வாதிக்கு கல்யாண மண்டபம் கொடுக்கவில்லை என்றும் அதிலிருந்து வருமானம் எதுவும் வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இந்தியாவில் என் தந்தைக்கு வழக்கு சொத்துக்கள் தவிர வேறு சொத்துக்கள் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. சென்னையில் பட்டா இல்லாத இடம் என் அப்பா பேரில் உள்ளது. அதை இந்த வழக்கில் சேர்க்கவில்லை. சென்னை சொத்து விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வாதிக்கு தெரியும். என் அத்தாவின் 2-வது மனைவிக்கு அந்த விபரம் தெரியும். போய் பார்த்ததாக சொன்னார்கள். வழக்கிற்காக மேற்கண்ட விபரத்தை பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி காது கேளாதவர் மற்றும் வாய் பேச முடியாதவர் என்றால் சரிதான். வாதி காது கேளாதவர் மற்றும் வாய் பேசாதவர் என்பதால் அவருக்கு பதிலாக அவரது மனைவி நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்ததில் தவறில்லை என்றால் அவரது மனைவி தவறாக சாட்சியம் அளித்துள்ளார். வாதியின் நிரந்தர ஊனத்தை பயன்படுத்தி அவரை பலமுறை அலைய வைத்தால் அவர் வழக்கு சொத்தை விட்டு விட்டு சிங்கப்பூருக்கே சென்று விடுவார் என்றும் அதனால் தவறான வாதத்தை முன் வைத்து பாகம் கொடுக்காமல் வழக்கு நடத்துகிறோம் என்று சொன்னால் சரியல்ல. வாதி கேட்கும் பாகப் பிரிவினை பரிகாரம் கொடுக்க கூடியதா என்றால் பாகப் பிரிவினை படி வாதிக்கு ஒதுக்கியதை வாதி

அனுபவித்து வருகிறார். நான் தாங்கள் செய்துள்ள பி.சா.ஆ.1 ஆவணம் Morphing மூலம் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தாவா படி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

M SHANTHI
Digitally signed by M SHANTHI
DN: cn=M SHANTHI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2023.12.07 17:41:15 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.